මධ්‍යම පරිසර අධිකාරිය
மத்திய சுற்றாடல் அதிகாரசபை
Central Environmental Authority

"පරිසර පියස", 104, ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
"பரிசர பியச", 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை, இலங்கை.
"Parisara Piyasa", 104, Denzil Kobbekaduwa Mawatha, Battaramulla, Sri Lanka . Web : www.cea.lk

අපේ යොමුව / எமது தொடர்பு / Our Ref. CEA/06/EPU/PR/39/2023 | ඔබේ යොමුව / உமது தொடர்பு / Your Ref. | දිනය / திகதி / Date 2023.08.23

# ஊடக அறிவித்தல்

## சுற்றாடலைப் பாதுகாத்திட மேலும் இரண்டு வர்த்தமானிகள்....

**மேலும் 09 தனிப்பாவனை பிளாஸ்ரிக் பொருட்களுக்கான தடை...**

**"ஹாலிஎல நீர் மூலங்களின் ஒதுக்கம்" சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசமாக பிரகடனம் செய்யப்படுகின்றது...**

- **மேலும் 09 தனிப்பாவனை பிளாஸ்ரிக் பொருட்களுக்கான தடை....**

1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் மூலமாக சுற்றாடல் அமைச்சர் திரு. நசீர் அஹமட் அவர்களுக்கு கிடைத்துள்ள தத்துவங்களின் பிரகாரம் 2023 யூலை மாதம் 19 ஆந் திகதி 2341/30 இலக்கமுடைய வர்த்தமானப் பத்திரிகை மூலமாக நாட்டுக்குள்ளே 09 தனிப்பாவனை பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனைக்கானஏதேனும் செயற்பாங்கு, வர்த்தகம் அல்லது கைத்தொழில்களுக்காக ஈடுபடுத்தப்படுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

அதற்கிணங்க தனிப்பாவனை பிளாஸ்ரிக் பொருட்களாக பானக் குழாய்களும் கலவையிடல்களும், பிளாஸ்ரிக் பீங்கான்கள், கோப்பைகள், கரண்டிகள், முள்ளுக்கரண்டிகளும் கத்திகளும், பிளாஸ்டிக் மலர் மாலைகள் மற்றும் பிளாஸ்ரிக் இடியப்பத் தட்டுகள் போன்றவை உள்ளடங்கும். அதற்கிணங்க 2023 ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதிக்குப் பின்னர் மேற்படி பொருட்களை நாட்டில் உற்பத்தி செய்தல், உள்நாட்டுப் பாவனைக்காக இறக்குமதிசெய்தல், விற்பனை செய்தல், விற்பனைக்காக காட்சிக்கு வைத்தல், இலவசமாக வழங்குதல் அல்லது காட்சிப்படுத்துதல் தடைசெய்யப்படுவதோடு தடையை மீறினால் தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சட்டம் அமுலாக்கப்படும்.

பிளாஸ்ரிக் மூலமாக இடம்பெறுகின்ற பாரிய சுற்றாடல் மாசுபாட்டினை தடுப்பதற்காக அனைவரும் கூட்டாக செயற்படவேண்டியது காலத்தின் தேவையாகும். அதற்கிணங்க அத்தியாவசியமற்ற பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனை மற்றும் அதனைச் சார்ந்ததாக தோன்றுகின்ற சுற்றாடல் சிக்கல்களை குறைத்துக்கொண்டு உயிரினங்களை உள்ளிட்ட சுற்றாடலைப் பாதுகாத்துக்கொள்வதற்கான உறுதுணையை வழங்குவதை நோக்கமாகக்கொண்டே இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் பிளாஸ்ரிக் இறக்குமதி மூலமான அந்நியச் செலாவணியை குறைப்பதுடன் இவற்றுக்கு மாற்றீடான சுற்றாடல் நேயமுள்ள பொருட்களின் உள்ளூர் உற்பத்தி தொழில்துறைகளை முன்னேற்றுவதற்கான வாய்ப்பும் உருவாகும்.

• **"ஹாலிஎல நீர் மூலங்களின் ஒதுக்கம் "சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசமாக பிரகடனம் செய்யப்படுகின்றது...**

பதுளை மாவட்டத்தின் ஹாலிஎல பிரதேச செயலாளர் பிரிவின் தேயிலைத் தோட்டக் காணிகளில் அமைந்துள்ள நீர் மூலங்களின் ஒதுக்கக் காணித்துண்டுகள் 362 உள்ளடக்கிய நிலப்பகுதி 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் மூலமாக சுற்றாடல் அமைச்சர் திரு. நசீர் அஹமட் அவர்களுக்கு கிடைத்துள்ள தத்துவங்களின் பிரகாரம் 2023 யூன் மாதம் 09 ஆந் திகதி 2335/21 இலக்கமுடைய வர்த்தமானப் பத்திரிகை மூலமாக **"ஹாலிஎல நீர் மூலங்களின் ஒதுக்கம் சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசம்"** எனும் பெயரில் சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசமாக பிரகடனஞ் செய்யப்பட்டுள்ளது.

பதுலு ஓயாவுக்கு ஊட்டமளிக்கின்ற சிறிய நீர் வழிகளுக்கு நீர் கிடைக்கின்ற நீர் மூலங்கள் இந்த பிரதேசத்தில் இருக்கின்றன. மேற்படி நீர் மூலங்கள் பாதுகாக்கப்படுவதை தேசிய அவசியப்பாடாகக் கருதி பேணிப்பாதுகாத்தல் மற்றும் சட்டரீதியான பாதுகாப்பினை பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடன் இந்த பிரதேசத்தை சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசமாக பிரகடனப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதற்கிணங்க, இனிமேல் "ஹாலிஎல நீர் மூலங்களின் ஒதுக்கமான சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசத்தில்" அனுமதிபெற்ற செயற்பாடுகளை மாத்திரமே மேற்கொள்ள முடியுமானதாக அமைவதோடு, அவையும் வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டதாக மேற்கொள்ளப்பட வேண்டும். நீர் மூலங்களின் ஒதுக்குப் பிரதேசங்களை விருத்திசெய்வதற்காக மேற்கொள்ளப்படுகின்ற மரநடுகை நிகழ்ச்சித்திட்டங்கள், கிராமிய சமுதாயங்களுக்கு குடிநீர் வழங்கப்படுகின்ற சமுதாய அடிப்படையிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள் மற்றும் ஹாலிஎல சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசத்தின் நிலைபேறான வழியுரிமையுடன் தொடர்புடைய செயற்பாடுகள் இவ்விதமாக அனுமதிபெற்ற பாவனைகளாக பிரகடனஞ் செய்யப்பட்டுள்ளன.

தேசிய சுற்றாடல் சட்டத்திற்கிணங்க, சுற்றாடல் ரீதியாக தனித்துவமான பிரதேசங்களை சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்களாக பிரகடனஞ்செய்தல் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு அப்பிரதேசங்களின் நீண்டகால நிலைபேறான வழியுரிமையை உறுதிசெய்வதற்கான ஒழுங்குறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி இன்றளவில் இலங்கையில் பத்து சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசங்கள் பிரகடனஞ் செய்யப்பட்டள்ளதோடு "ஹாலிஎல நீர் மூலங்கள் ஒதுக்க சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசம்" பதினோராவது சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசமாகும்.

ஊடக இணைப்பாக்கம் - ஊடக உத்தியோகத்தர் - ஸ்ரீயாஞ்ஜனீ லொக்குலியன- 077 6262288

பி.பீ. ஹேமந்த ஜயசிங்க
பணிப்பாளர் நாயகம்
மத்திய சுற்றாடல் அதிகாரசபை